**செய்தி வெளியீடு எண்: 73** **நாள்:29.01.2013**

செய்தி வெளியீடு

மக்கட் தொகை பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும், விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் உணவு, நீர் மற்றும் வாழ்விடம் ஆகியவற்றிற்காக பெரும்பாலும் வனவிலங்குகள் இடம் பெயர்ந்து, மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள் வனவிலங்குகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகிறது. இதனால் விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவது, அவை விரும்பி உண்ணும் பயிர்களை காட்டுப் பகுதியிலேயே வளர்ப்பது, காடுகளின் எல்லை ஓரமாக தடைகளை ஏற்படுத்துவது, கிராம மக்களின் திறனை மேம்படுத்துவது, விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மனித உயிருக்கும், பயிர்களுக்கும் உடமைகளுக்கும் விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தொலைநோக்கு திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தர்மபுரி மண்டலத்திலுள்ள ஓசூர் மற்றும் தர்மபுரி, கோயம்புத்தூர் மண்டலத்திலுள்ள கோயம்புத்தூர், நீலகிரி வடக்கு மற்றும் கூடலூர், ஈரோடு மண்டலத்திலுள்ள சத்தியமங்கலம், திண்டுக்கல் மண்டலத்திலுள்ள கொடைக்கானல் மற்றும் திண்டுக்கல், வேலூர் மண்டலத்திலுள்ள திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை, மதுரை மண்டலத்திலுள்ள தேனி, விருதுநகர் மண்டலத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி மண்டலத்திலுள்ள திருநெல்வேலி, ஆனைமலை புலிகள் சரணாலயத்திலுள்ள உடுமலைப்பேட்டை மற்றும் பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் யானைகள் மற்றும் விலங்குகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். இதனைப் போக்கும் வகையில் இப்பகுதிகளில் யானை தடுப்பு அகழிகள் அமைப்பது மற்றும் பராமரித்தல், விலங்குகள் வசிக்கும் பகுதிகளில் தடுப்பு அணைகள் மூலம் அதிக அளவு தண்ணீர் சேமித்தல், குளங்கள் மற்றும் குட்டைகள் அமைத்தல், ஆழ்துளை கிணறுகளை அமைத்து தண்ணீர் வசதியைப் பெருக்குதல், எச்சரிக்கை மணி ஒலிக்கும் வசதி ஏற்படுத்துதல், சூரிய மின் ஒளியுடன் கூடிய வேலிகள் அமைத்தல், வனக்காவலர்களை அதிக அளவில் பணியில் ஈடுபடுத்துதல், அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல், டார்ச் லைட் வழங்குதல், விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துதல், அவை விரும்பி உண்ணும் பயிர்களை வளர்த்தல் போன்ற பல்வேறு பணிகளை செயல்படுத்த 10 கோடியே 44 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணிகளை செயல்படுத்துவதன் மூலம் யானை மற்றும் ஏனைய விலங்குகள் மக்கள் வாழ்விடங்களுக்குள் நுழைவது தடுக்கப்படும்.

ஒரு மாநிலத்தின் நீடித்த முன்னேற்றமானது பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாத்தல் என்ற மூன்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. இயற்கை ஆதாரங்களின் மீதான அதிக நெருக்கடியால் சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்பது ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது. எனவே சூழலியல் சமன்பெற நிலம், நீர், காடுகள் மற்றும் பல்லுயிரியினப் பெருக்கம் ஆகியவற்றை பாதுகாத்து மேம்படுத்துதல் அவசியமாகும். எனவே சுற்றுச்சூழல் பாதிப்பால் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளை சமாளிப்பதற்காக நதிநீர் மற்றும் ஏரிகளில் மாசுத் தடுப்பு, பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு, தமிழகத்திலுள்ள அனைத்து மக்களிடமும் குறிப்பாக வருங்கால சந்ததியினரான மாணவ மாணவியருக்கு ஏற்படுத்துவதற்காக தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இம்மன்றங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் ஒரு பகுதியாக, நடப்பாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 பள்ளிகள் வீதம் 32 மாவட்டங்களில் 3,200 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஒரு மன்றத்திற்கு 2,500 ரூபாய் வீதம் 3,200 மன்றங்களுக்கு 80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் மாணவர்களுக்கு நீர், மண் மற்றும் காற்று ஆகியவற்றினை பாதிக்கக்கூடிய சூழல் விவரங்களை அறிந்து கொள்வதற்காக, தமிழகத்திலுள்ள 1,000 பள்ளிகளுக்கு நீர் மற்றும் மண் ஆய்வக பரிசோதனை உபகரணங்களுடன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காற்று ஆய்வு உபகரணமும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக 55 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 602 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 47 வகை பாலூட்டி இனங்கள், 59 வகை பறவையினங்கள் மற்றும் 31 வகை ஊர்வன இனங்கள் என மொத்தம் 137 வகை வன உயிரினங்களுடன் 1,541 விலங்குகள் மக்களின் பார்வைக்காக உள்ளன. ஆண்டுதோறும் ஏறத்தாழ 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இங்கு வருகை புரிகின்றனர்.

இந்த உயிரியல் பூங்காவில் வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில், இயற்கைச் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு மையம், வன உயிரின தடய அறிவியல் ஆராய்ச்சிக் கூடம், தாவரங்கள் மற்றும் மாமிசம் உண்ணும் விலங்குகள் பற்றிய பெரிய அளவிலான கள ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த ஆராய்ச்சி நிறுவனம் 27.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இந்நிறுவனத்தில் பணியாற்ற 2 விஞ்ஞானி பணியிடங்கள், 4 இளநிலை ஆராய்ச்சியாளர் பணியிடங்கள், 2 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் என 8 பணியிடங்களை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கு அரசுக்கு ஆண்டொன்றுக்கு 26.99 லட்சம் ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைத் தரும் இடமாகும். இந்த இடத்தில் உள்ள மேல் அணைக்கட்டு பகுதியில், உலகில் அழிந்து வரும் மிக அரிய வகை வண்ணத்துப்பூச்சி இனங்களை பாதுகாக்கும் பொருட்டு, வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திரவனம் (27 நட்சத்திரங்களுக்குரிய மரம்

அல்லது தாவர இனம்) 10 ஹெக்டேர் நிலத்தில் 4 கோடியே 94 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது ஸ்ரீரங்கத்திற்கு வருகைத் தரும் பயணிகளுக்கு பொழுதுபோக்கு இடமாக அமையும்.

தமிழகத்தில் உள்ள வனப் பகுதிகளை பாதுகாத்தல், வன விலங்குகளை பாதுகாத்தல், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமான மோதலைத் தடுத்தல், தீத்தடுப்புப் பணி மற்றும் வனப்பரப்பை அதிகரிக்கும் வகையிலான அரசின் திட்டங்களை செயல்படுத்துவது ஆகிய பணிகளை வனத்துறையினர் செய்து வருகின்றனர். இந்த துறையில் பல பிரிவுகளில் மொத்தம் 6,242 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

வனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இரவு, பகல் என்று பாராமலும், வெயில், மழை, காற்று போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும் காலங்களிலும் வனங்களில் தொடர்ந்து பணியாற்று வருகின்றனர். இவர்களின் பணிசிறக்க ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஜோடி காலணி (Shoes) மற்றும் டார்ச் லைட் வழங்கவும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மழை கோட் (Rain Coat) வழங்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு 58.98 லட்சம் செலவினம் ஏற்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் வனத்துறையின் பணிகள் மேலோங்குவதற்கு வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 29.1.2013.